IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
O.S. No.15/2026
Deposition of Witness for PW.1

Name : திருமதி.தன்யா
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.06.2026.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி வங்கியில் கிளை மேலாளராக பணியில் இருக்கிறேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 13.10.2016 அன்று பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு கொடுத்த கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1. 19.12.2016 அன்று வாதி வங்கி பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்த சம்மதித்த இசைவு கடிதம் வா.சா.ஆ.2. 19.12.2016 தேதி வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த கடன் உறுதி ஆவணம் வா.சா.ஆ.3. 19.12.2016 தேதி 1ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு கொடுத்த கல்வி கடன் ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.4. 19.12.2016 அன்று 2ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு கொடுத்த கல்வி கடன் உத்திரவாத கடிதம் வா.சா.ஆ.5. 19.12.2016 அன்று 1ம் பிரதிவாதி வருங்கால வருமானத்தை வங்கிக்கு அளிப்பதற்கான உறுதி மொழி கடிதம் வா.சா.ஆ.6. 19.12.2016 அன்று பிரதிவாதிகள் வங்கிக்கு எழுதிக்கொடுத்த உத்திரவாத கடிதம் வா.சா.ஆ.7. 19.12.2016 அன்று பிரதிவாதிகள் வங்கிக்கு எழுதிக்கொடுத்த உத்திரவாத கடிதம் வா.சா.ஆ.8. பிரதிவாதிகள் வங்கிக்கு கடன் நிலுவை தொகையை தொடர்பாக எழுதிக் கொடுத்த சான்று வா.சா.ஆ.9. பிரதிவாதிகள் 15.12.2020 வங்கிக்கு கடன் நிலுவை தொகையை தொடர்பாக எழுதிக் கொடுத்த சான்று வா.சா.ஆ.10. பிரதிவாதிகள் 01.12.2023 வங்கிக்கு கடன் நிலுவை தொகையை

தொடர்பாக எழுதிக் கொடுத்த சான்று வா.சா.ஆ.11. 09.10.2023 தேதியிட்ட வங்கியின் அறிவிப்பு வா.சா.ஆ.12. வங்கி கணக்கு விபரம் வா.சா.ஆ.13.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.